





## திராவிட மாடல் அரசு

93

**பன்னீர் பெருமாள்**

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

# நவீன மீன் அங்காடி!

## தரைக்கடையிலிருந்து சர்வதேசத் தரத்துக்கு...

திராவிட முன்னேற்றக் கழகம், ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் ஒவ்வொரு காலகட்டத்திலும் சென்னை மாநகரின் வளர்ச்சியை மேம்படுத்துவதில், திட்டமிடுவதில், கூடுதல் கவனம் செலுத்தி செயல்பட்டுள்ளது. சென்னை மாநகரின் அத்தனை நவீன அடையாளங்களும் தி.மு.க.வால் உருவாக்கப்பட்டது, என்று சொன்னால் மிகையாகாது .

அந்த வகையில், திராவிட மாடல் ஆட்சி அமைந்தது முதல் தொடர்ச்சியாக, சென்னை மாநகரின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்த, இரண்டாம் கட்ட மெட்ரோ உள்ளிட்ட பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

**‘எல்லோருக்கும் எல்லாம்’** என்ற இலக்குடன் செயல்படும் திராவிட மாடல் அரசு, மெட்ரோ, மேம்பாலம், பூங்கா என்று மட்டுமல்லாமல், ஏழை எளிய சிறு குறு வணிகர்களுக்காகவும் திட்டமிட்டு செயல்படுவதற்கு, எடுத்துக்காட்டு தான் ‘பட்டினப்பாக்கம் நவீன மீன் அங்காடி’.

சென்னை, மெரினா கடற்கரையை ஒட்டிய பட்டினப்பாக்கம், லூப் சாலை என்பது மீனவர்கள் சாலை ஓரத்தில் மீன் விற்கும் பகுதியாகவே இருந்தது. காமராஜர் சாலைக்கும் சீனிவாசபுரத்துக்கும் இடையிலான இந்த சாலை வார இறுதி நாட்களில் மீன் வணிகத்தால் ஏற்படும் போக்குவரத்து நெரிசலுக்குள் சிக்கி தவித்தது. இந்தச் சிக்கலைத் தீர்க்க, அப்பகுதியின் மீன் விற்பனையாளர்கள் வாழ்வாதாரத்தைக் காக்கும் பொருட்டு, திராவிட மாடல் அரசு உருவாக்கியதுதான், பட்டினப்பாக்கம் நவீன மீன் அங்காடி.

### நவீன கட்டமைப்பில் அங்காடி

திராவிட மாடல் நாயகர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு 2022-ஆம் ஆண்டு சட்டமன்ற மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, “மீனவர்களும், பொதுமக்களும் பயன்பெறும் வகையில், சென்னை, பட்டினப்பாக்கம் கடற்கரை லூப் சாலையில் ரூ.10.75 கோடி மதிப்பீட்டில் நவீன மீன் அங்காடி அமைக்கப்படும்” என அறிவித்தார்.

அதனைத் தொடர்ந்து பட்டினப்பாக்கம் கடற்கரையை ஒட்டியுள்ள லூப் சாலையில், நவீன மீன் அங்காடி அமைக்க நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் நிர்வாக அனுமதியும், உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின் கீழ், ரூ.9.97 கோடி நிதி ஒதுக்கீடு செய்தும் அரசாணை வெளியிடப்பட்டது.





**போக்குவரத்து நெரிசலைக் காரணமாகச் சொல்லி, ஏழை எளிய மக்களின் மீன் வணிகத்திற்கு பாதிப்பு ஏற்படக்கூடாது, எனத் திட்டமிட்டதுதான் திராவிட மாடல் அரசின் உறுதிக்குச் சான்று.**

அதிநவீன வசதிகளுடன் உருவாக்கப்பட்ட இந்த மீன் அங்காடி ரூ.14.93 கோடியில் கட்டி முடிக்கப்பட்டது. 2 ஆண்டுகளாகக் கட்டப்பட்டு வந்த 366 கடைகளுடன் கூடிய நவீன மீன் அங்காடியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஆகஸ்ட், 12-ஆம் தேதி திறந்து வைக்கவே, மக்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

### குலுக்கல் முறையில் ஒதுக்கீடு

2 ஏக்கரில், சுமார் 50 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் அமைக்கப்பட்ட, இந்த நவீன மீன் அங்காடியில் 366 கடைகள் உருவாக்க பட்டுள்ளன. இங்கு, நொச்சி நகர், நொச்சிக் குப்பம், டுமீங் குப்பம் பகுதியைச் சேர்ந்த மீனவர்களுக்கு, குலுக்கல் முறையில் கடைகள் ஒதுக்கப்பட்டன.

அது மட்டும் இல்லாமல், மீன் சுத்தம் செய்து கொடுப்பதற்கு என்று தனியாக இரண்டு பகுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

மீன் அங்காடியைச் சுத்தமாகவும் சுகாதாரமாகவும், துர்நாற்றம் இல்லாமலும் பராமரிக்க வேண்டும் என்பதற்காக, 40 கே.எல்.டி. கொள்ளளவில் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையத்தையும் அங்காடியின் வளாகத்திலேயே அமைத்துள்ளது அரசு. இவை தவிர, குடிநீர் வசதி, கழிப்பிட வசதி மற்றும் தடையற்ற மின்வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மீன் அங்காடியின் வெளியில், லூப் சாலையில் உயர் கோபுர மின்விளக்கு அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### சிறந்த வாகன நிறுத்தம்

மீன் வியாபாரிகள் மற்றும் பொதுமக்களின் வாகனங்களை நிறுத்தும் வகையில், 67 இரு சக்கர வாகனங்கள், 110 நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கான வசதியும் செய்யப்பட்டுள்ளது.

மீன் அங்காடிக்கு வெளியே லூப் சாலையில் வாகனங்கள் நிறுத்துவதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நவீன மீன் அங்காடியின் உள்ளேயும், வெளியேயும் நிர்ணயிக்கப்பட்ட இடங்களில், வாகனங்களை நிறுத்துவதற்கு எவ்வித வாகனக் கட்டணமும் வசூலிக்கப்பட மாட்டாது

இந்த மீன் அங்காடி அருகே, வாகன நிறுத்தங்களை முறைப்படுத்த, போக்குவரத்து நெருக்கடி ஏற்படாமல் கண்காணிக்க, சென்னை மாநகராட்சி மற்றும் போக்குவரத்துக் காவல் துறை அலுவலர்கள் கொண்ட சிறப்புக் குழு அமைத்து, தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புறக்காவல் நிலையமும் விரைவில் அமைக்கப்பட உள்ளது.

**‘எல்லோருக்கும் எல்லாம்’** என்று செயல்படும் திராவிட மாடல் அரசு பட்டினப்பாக்கத்தில் உருவாக்கிய, அதிநவீன மீன் அங்காடியில் திருநங்கைகளுக்கு 3 கடைகள் ஒதுக்கி, அவர்களும் சுயதொழில் செய்யும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

போக்குவரத்து நெரிசலைக் காரணமாகச் சொல்லி, ஏழை எளிய மக்களின் மீன் வணிகத்திற்கு பாதிப்பு ஏற்படக்கூடாது, எனத் திட்டமிட்டதுதான் திராவிட மாடல் அரசின் உறுதிக்குச் சான்று.

**...சாதனை தொடரும்**

### குழப்பும் குழப்பவாதிகள்!

நவம்பர் 1-ஐ ‘தமிழ்நாடு’ நாளாகக் கொண்டாட வேண்டும் என்று கிளம்பி இருக்கும் ஈசல்களுக்கு ஒரு சில கேள்விகள்.

1956-ஆம் ஆண்டு நவம்பர் 1-ஆம் நாளுடன் எல்லைப் பிரச்சினை முடிந்துவிட்டதா? அன்றைக்கே இப்போது இருக்கும் நில அமைப்பைக் கொண்ட தமிழ்நாடு உருவாகி விட்டதா? அன்றைய நாளில் இந்த நிலத்திற்குப் பெயர்தான் என்ன? மெட்ராஸ் ஸ்டேட்டா ? தமிழ்நாடா?

அன்றைக்கே தமிழ்நாடு உருவாகி விட்டது என்றால், அதன் பிறகு தமிழர் பகுதிகள் இணைப்பு குறித்த சர்ச்சைகளுக்குத் தீர்வு காண ஹெச்.வி.படாஸ்கர் தலைமையிலான ஆணையம் அமைக்கப்பட்டது எதற்காக?

இந்த ஆணையத்தின் விளைவாகத்தான் ஒசூர், ஆந்திராவுக்குக் கிடையாது என்று, 1957-ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. பொன்னேரியை ஒட்டிய கிராமங்கள் ஆந்திராவுக்குப் போவது குறித்த பிரச்சினைகள் 1959-ஆம் ஆண்டு வரை நடந்தன. 1960-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம்தான் இறுதி முடிவுக்கு வந்தது.

இவை நடைபெற்ற போதும் சரி, நடந்து முடிந்த போதும் சரி ‘தமிழ்நாடு’ என்ற பெயர் தமிழ் நிலத்திற்குச் சூட்டப்படவே இல்லையே, இவை எல்லாம் நடந்து முடிந்து 7 ஆண்டுகள் கழித்து, பேரறிஞர் அண்ணா முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு தானே பெயர் மாற்றத் தீர்மானம் எவ்வித எதிர்ப்பும் இன்றி ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மொழிப்பற்று கொண்ட பெரும் மக்கள் திரள் மேற்கொண்ட போராட்டங்களுக்குப் பிறகும், ஒரு நாட்டின் அங்கமாக இருந்த பகுதிகள் பிரிந்து சென்ற நாளை, அந்த நாடே கொண்டாட முடியுமா? அப்படிக் கொண்டாடினால், அதைவிட அபத்தம் வேறெதுவும் உண்டா?

*-கௌதம் ராஜ்*

### :ப்ளாஷ்பேக்



#### பொக்கிஷமான புகைப்படம்!



**வி.சேக் அப்துல் காதர்**

1998-ஆம் ஆண்டு இன்றைய கழகத் தலைவரும் அன்றைய இளைஞர் அணிச் செயலாளருமான தளபதி அவர்கள், திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் பகுதிக்கு வருகை தந்திருந்தார். அப்போது, இன்றைய துணைப் பொதுச் செயலாளர் அண்ணன் ஐ.பெரியசாமி அவர்கள் மாவட்டச் செயலாளராக இருந்தார், நான் ஒன்றியப் பிரதிநிதியாகப் பணி செய்து வந்தேன். அப்போது, பரப்பலாறு அணை அருகில், உள்ள விடுதியில் தங்கி இருந்த தலைவர் தளபதி அவர்களைச் சந்தித்து, புகைப்படம் எடுத்துக் கொண்டேன். நான் பொக்கிஷமாகப் போற்றிப் பாதுகாக்கும் புகைப்படம் இது.

**– வி.சேக் அப்துல் காதர், துணை அமைப்பாளர், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, திருச்சி கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்

#### நீதிக்கட்சி செல்வாக்கும் வீழ்ச்சியும்...

1930-ஆம் ஆண்டில் இடம்பெற்ற தேர்தலில் வெற்றி பெற்று, நீதிக்கட்சி மீண்டும் ஆட்சி அமைத்ததுடன், தொடர்ந்து வந்த தேர்தல்களிலும் வென்று, 1937-ஆம் ஆண்டு வரை நீதிக்கட்சி ஆட்சியைத் தக்கவைத்துக் கொண்டிருந்தது. எனினும், 1926-ஆம் ஆண்டு முதலே நீதிக்கட்சியின் செல்வாக்கு வீழ்ச்சியடைந்தே வந்தது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

649

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131